TNRM010045662023

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிமன்றம்

**முன்னிலை: திரு.எஸ். குமரகுரு, பி.எல்.,**
விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
இராமநாதபுரம்.

2024ம் ஆண்டு மார்ச் மாதம் 08–ம் நாள் வெள்ளிக்கிழமை
மோ.வா.வி.கோ.தீ.அசல் மனு எண்.195/2023
**CNR No: TNRM01-004566-2023**
****

1) மங்கையர்கரசி, வயது 51/2023, க/பெ.லேட். ராமு, கதவிலக்கம் 4–420, காலணி தெரு, புல்லங்குடி கிராமம், இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

2) பிரியா, வயது 32/2023, க/பெ. கதிர்வேல், கதவிலக்கம் 4–86, கிழக்கு தெரு, புல்லங்குடி கிராமம், இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

3) பசுபதி, வயது 28/2023, த/பெ. லேட். ராமு, கதவிலக்கம் 4–420, காலணி தெரு, புல்லங்குடி கிராமம், இராமநாதபுரம் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

**..... மனுதாரர்கள்**

**/எதிர்/**

1) தஸ்லீம் பேகம், க/பெ. ஜாகீர் ஹுசைன், கதவு எண் 2ஏ, பந்தல்குடி முதல் வீதி, செல்லூர், மதுரை–625 002.

2) கோட்ட மேலாளர், இப்கோ டோக்கியோ ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்., சந்திரகாந்தி நகர், பைபாஸ் ரோடு, பொன்மேனி, மதுரை.
(Policy No.MP574979 Valid from 17.06.2022 to 16.06.2023)

**.... எதிர்மனுதாரர்கள்**

இம்மனு மோட்டார் வாகன விபத்துச் சட்டம்–1988 பிரிவுகள் 140, 141, 142, 163(பி), 166 மற்றும் 182(ஏ)–ன் படியும் உடன் இணைந்த மோட்டார் வாகன கோருரிமை தீர்ப்பாய விதிகள் திருத்தப்பட்ட சட்டம் 54/1994 விதி 3(1)–ன் கீழ் இந்த மோட்டார் வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது. இந்த வழக்கில் வாகன விபத்தில் இறந்தவர் ராமு. அவரின் வாரிசுகளான 1, 2, 3வது மனுதாரர்கள்

இழப்பீட்டுத் தொகையாக ரூ.40,00,000/-த்தை இழப்பீடாக 1, 2ம் எதிர்மனுதாரர்கள் கொடுக்க உத்தரவிட்டும், மேற்படி இழப்பீட்டுத் தொகையை மனுதாக்கல் செய்த தேதியிலிருந்து நீதிமன்றத்தில் இழப்பீடு பணம் செலுத்தும் தேதி வரை 12% வட்டியுடனும் இம்மனுவிற்கான வழக்கு செலவுத்தொகையையும் கொடுக்கும்படிக்கும் உத்தரவு கோரி மனுதார்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்கள் ரூ.40,00,000/- இழப்பீடாக கோரியுள்ளார். அதற்கு நீதிமன்றக் கட்டணமாக மோட்டார் வாகன இழப்பீடு தீர்ப்பாயம் 1989ம் ஆண்டு விதி 24(1)ன் கீழ் ரூ.39,372.50/- செலுத்தப்படவேண்டும். ஆனால் மனுதாரரால் ரூ.372.50/- மட்டும் நீதிமன்ற கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.39,000/-க்கு U/s.24(3) M.V.Act ன்படி நீதிமன்ற கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்க வேண்டி 31.08.2023 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு இ.ம.எண்.1/2023 ஆக இந்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள்: 14.08.2023 & 28.08.2023.

இம்மனுவானது 08.03.2024 அன்று விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K. குணசேகரன் அவர்கள் ஆஜராகியும், 2வது எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.A. தர்மராஜ் அவர்கள் ஆஜராகியும், 1 வது எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. 2வது எதிர்மனுதார் அழைக்கப்பட்டும் ஆஜரில்லாததால் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டார். மனுதாரர் அழைக்கப்படும் ஆஜரில்லாத நிலையில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

TNRM010045662023

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

1. மனுதாரரை அழைத்தும் ஆஜரில்லாததாலும், மனுதாரர்தரப்பில் எவ்வித தகவலும் இல்லாததாலும் முந்தைய உத்தரவை நிறைவு செய்யாததாலும் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது

2. செலவுத் தொகை பற்றி உத்தரவு ஏதும் இல்லை.

2024ம் ஆண்டு மார்ச் மாதம் 08ம் நாளான இன்று என்னால் கையெழுத்திடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் தீர்ப்பாணை உத்தரவு வழங்கப்படுகிறது.

**ஒப்பம்/ எஸ். குமரகுரு,**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**முதன்மை மாவட்ட நீதிமன்றம்,**

**இராமநாதபுரம்.**

**M.C.O.P.No.195/2023**

**தீர்ப்பாணை உத்தரவு**

**நாள்: 08.03.2024.**